தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2026

**11 வயதுப்பிரிவு**
**(01.01.2015 – 31.12.2015 வரையில் பிறந்தோர்)**

## பிரிகேடியர் தீபன்

ஆனந்தபுர முற்றுகைச் சமரின் வரலாற்று வீரர்களுள் ஒருவரே பிரிகேடியர் தீபன். 1984ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டவர். தாய்நாட்டை ஆழமாக நேசித்து, தமிழீழத் தேசியத் தலைவரின் வழி நடந்த தளபதி.

களம் பல கண்ட இளம்புலியாக, தலைவர் மாமாவின் போரியல் திட்டங்களை வெற்றியாக்கும் நம்பிக்கைக்குரிய போராளியாக, தாக்குதல் அணிகளின் பொறுப்பாளராக, கட்டளைத் தளபதியாக, சிங்கள இராணுவத்தைக் கிலிகொள்ளச் செய்த போர்வீரனாகத் திகழ்ந்தவர்.

தவளைப்பாய்ச்சல், யாழ்தேவி, ஓயாத அலைகள் என்று தமிழீழம் தாங்கி நின்ற வெற்றிச் சமர்கள் யாவும் இவரது போர்த்திறனைப் பதிவுசெய்துள்ளன. அனைத்துலகப் போரியல் வல்லுனர்களால் வியந்து நோக்கப்பட்ட ஆனையிறவு பெருந்தள மீட்புக்கு சமர்க்கள நாயகனாம் பிரிகேடியர் பால்ராஜ் அவர்களுக்கு உறுதுணையாகப் பங்காற்றிய பெருவீரன்.

இவர் தன் இறுதி மூச்சுவரை தமிழீழ விடுதலைக்காக அயராது உழைத்தவர். பல்லாயிரம் போராளிகளை விடுதலைப் பாதையில் வழிப்படுத்தியவர். பிரிகேடியர் பால்ராஜ் அவர்களைத் தன் போர் ஆசான் என்று பதிவுசெய்தவர். இவர் நெருக்கடியான களச்சூழல்களைத் தங்கள் அர்ப்பணிப்புகளால் நேர்த்தியாக்கிய பெருந்தளபதிகளுள் ஒருவர்.

பிரிகேடியர் தீபன் 2009 ஏப்ரல் நான்காம் நாள் ஆனந்தபுர மண்ணிலே தமிழீழ விடுதலைக்கு வித்தானார். ஒன்றுக்கு மேற்பட்ட மாவீரர்களைத் தமிழீழ விடுதலைக்காகத் தந்த குடும்பங்களுள் இவரது குடும்பமும் ஒன்றானது. எங்கள் மாவீரரது கனவாம் தமிழீழத் திருநாட்டை மீட்டாள்வோம்.

“தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்”